செ.வெ.எண்:08 நாள்:04.02.2019

# அரியலூர் மாவட்டத்தில் 30-வது சாலை பாதுகாப்பு வார விழா தொடக்கம்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வட்டார போக்குவரத்துத்துறை சார்பில் 30-வது சாலை பாதுகாப்பு வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி மற்றும் ஸ்கேட்டிங் மாணவர்கள் கலந்து கொண்ட பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்,** அவர்கள் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டத்தில் 30-வது சாலை பாதுகாப்பு வாரம் 04.02.2019 முதல் 10.02.2019 வரை கடைபிக்கப்படவுள்ளது. இந்த 29-வது சாலை பாதுகாப்பு விழாவானது சாலை பாதுகாப்பு – உயிரின் பாதுகாப்பு என்ற கருப்பொருளை மையப்படுத்தி தொடங்கிவைக்கப்பட்டது.

இச்சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாசகங்களை ஒளிபரப்பு செய்தல், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் கூடுதல் அவசர விபத்து மற்றும் சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல். தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் நெடுஞ்சாலை ரோந்து குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இரவு, பகலாக போக்குவரத்து விதி மீறல்களை கண்காணித்து நடவடிக்கை எடுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், ஒட்டுநர்கள் அனைவரும் சாலை விதிகளை கண்டிப்பாக கடைபிடித்திட வேண்டும். விபத்தில்லா பயணங்கள் மேற்கொள்ள சீரான வேகத்தில் பயணிக்க வேண்டும். பாதசாரிகள் சாலையின் இடது புறமாக எப்பொழுதும் சென்றிட வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் நியமிக்கப்படும் ஒட்டுநர்கள் தகுதியான, திறமை வாய்ந்த ஒட்டுநர்களையே பணியமர்த்தப்பட வேண்டும்.

அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி பேருந்துகளில் வேக கட்டுப்பாட்டு கருவி கட்டாயம் பொருத்தப்பட்டு வாகனங்களை நல்ல முறையில் பராமரிப்பு செய்து விபத்தில்லா மாவட்டமாக அரியலூரை மாற்றிட அனைத்து ஒட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், வட்டார போக்குவரத்து அலுவலர் ஆர்.ஜெயதேவ்ராஜ், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பெரியய்யா, துணை காவல் கண்காணிப்பாளர் மோகன்தாஸ், முதுநிலை மோட்டார் வாகன ஆய்வாளர் சரவணபவா மற்றும் காவல்துறையினர், அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர்கள், ஓட்டுநர் பயிற்சி மாணவர்கள், பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**